080/DD/19

TC-9

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST IN THE TAMILNADU SERVICES MANUAL VOLUME – I FOR THE STAFF OF THE TAMILNADU PUBLIC SERVICE COMMISSION

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

***IMPORTANT INSTRUCTIONS***

**OBJECTIVE TYPE**

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB :** **Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**

இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**

இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 100 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 100 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. A member of a civil service of a state holding a civil post shall be removed/dismissed by
   (A) An authority subordinate to that by which he was appointed
   (B) An authority higher than or equal to that by which he was appointed
   (C) Only by the authority by which he was appointed
   (D) Only by the higher authority

மாநில அரசு குடிமைப் பணிவகிக்கும் அங்கத்தினர் ஒருவரை பணிநீக்கம் அல்லது பணியறவு செய்ய தகுதி வாய்ந்தவர் எவர்?
   (A) அவரை நியமனம் செய்த அலுவலரை விட கீழமை பதவி வகிப்பவர்
   (B) அவரை நியமனம் செய்த அலுவலரை விட மேலான அல்லது சமமான பதவி வகிப்பவர்
   (C) அவரை நியமனம் செய்த அலுவலர் மட்டும்
   (D) அவரை நியமனம் செய்த அலுவலரை விட உயர் பதவி வகிப்பவர் மட்டும்

2. A candidate for appointment to a post under the state shall be
   (A) A citizen of India only
   (B) Either a citizen of India or Nepal
   (C) Either a citizen of India or Bhutan
   (D) Either a citizen of India, Nepal or Bhutan

மாநிலத்தின் அரசுப் பணியில் நியமிக்கப்பட ஒரு பணி வேட்பாளர் —————— நியமிக்கப்படலாம்
   (A) இந்தியக் குடிமகனாக இருந்தால் மட்டுமே
   (B) இந்திய அல்லது நேபாள குடிமகனாக இருந்தால் மட்டுமே
   (C) இந்திய அல்லது பூடான் குடிமகனாக இருந்தால்
   (D) இந்திய, நேபாள அல்லது பூடான் நாட்டு குடிமகனாக இருந்தால்

3. The Chairman of the Public Service Commission of the State shall be appointed by
   (A) the President
   (B) the Governor
   (C) the Chief Minister
   (D) the Chief Justice of High Court of the State

மாநிலத்தின் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் எவரால் நியமிக்கப்படுவார்?
   (A) குடியரசுத் தலைவரால்
   (B) ஆளுநரால்
   (C) முதலமைச்சரால்
   (D) மாநிலத்தின் உயர் நீதி மன்ற தலைமை நீதிபதியால்

4. The age and term upto which a Member of TNPSC can hold office is

(A) age 60 years or term 6 years whichever is earlier

(B) age 62 years or term 6 years whichever is earlier

(C) age 70 years or term 4 years whichever is earlier

(D) age 65 years or term 6 years whichever is earlier

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினரின் வயது மற்றும் பதவிக் காலம் ——————— ஆகும்

(A) வயது 60 ஆண்டுகள் அல்லது பதவிக் காலம் 6 ஆண்டுகள் இதில் எது முன்னரோ

(B) வயது 62 ஆண்டுகள் அல்லது பதவிக் காலம் 6 ஆண்டுகள் இதில் எது முன்னரோ

(C) வயது 70 ஆண்டுகள் அல்லது பதவிக் காலம் 4 ஆண்டுகள் இதில் எது முன்னரோ

(D) வயது 65 ஆண்டுகள் அல்லது பதவிக் காலம் 6 ஆண்டுகள் இதில் எது முன்னரோ

5. On expiry of term of office, a member of State Public Service Commission is

(A) Eligible for reappointment

(B) Not eligible for reappointment

(C) Eligible for extension of tenure

(D) Eligible for reappointment and extension of tenure

பதவிக் காலம் முடிந்த பின்னர் மாநில அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினர் ஒருவர்

(A) மறு பணி நியமனத்திற்கு தகுதியுடையராகிறார்

(B) மறு பணி நியமனத்திற்கு தகுதியற்றவராகிறார்

(C) பதவிக் கால நீட்டிப்பிற்கு தகுதியுடையவராகிறார்

(D) மறு பணி நியமனம் மற்றும் பதவிக் கால நீட்டிப்பு ஆகியவற்றிற்கு தகுதியுடையவராகிறார்

6. The Chairman of the State Public Service Commission

(A) Is eligible for appointment as Chairman or any other member of UPSC

(B) Is not eligible for appointment as Chairman of any other State Public Service Commission

(C) Eligible only for any other employment under the GOI

(D) Eligible only for any other employment under the State Government

மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர்

(A) மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராகவோ உறுப்பினராகவோ நியமிக்கப்படலாம்

(B) வேறெந்த மாநிலத்தின் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராக நியமிக்கப்பட தகுதியற்றவராகிறார்

(C) மத்திய அரசுப் பணிகளில் பணியாற்றுவதற்கு மட்டுமே தகுதியுடையவராகிறார்

(D) மாநில அரசுப் பணிகளில் பணியாற்றுவதற்கு மட்டுமே தகுதியுடையவராகிறார்

7. Consultation with the Tamil Nadu Public Service Commission is not necessary for

(A) Promotion within the same service

(B) For appointment from one class to another class in Tamil Nadu General Service

(C) For appointment on contract for period exceeding five years

(D) Where the Government propose to pass an original order on an appeal received by it

பின்வருவனவற்றுள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்ததாலோசனை தேவையில்லாத தேர்வு எது என தேர்ந்தெடுக்கவும்

(A) ஒரே பணியில் பதவி உயர்வு அளிக்கும் போது

(B) தமிழ்நாடு பொது பணிகளில் ஒரு வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்பிற்கு நியமிக்கப்படும் போது

(C) ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும் போது

(D) அரசு தன்னால் பெறப்பட்ட ஒரு மேல் முறையீடு மீது அசல் ஆணை வெளியிடும் முன்னர்

8. For the purpose of the Tamil Nadu Government Servants' (Condition of services) Act, 2016 a Destitute Widow is one

(A) Who should have been born in the state of Tamil Nadu only

(B) Who could have born outside Tamil Nadu also

(C) Who marriage ceremony ws conducted in Tamil Nadu

(D) Whose parents are born in the state of Tamil Nadu

தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 இன் படி ஆதரவற்ற விதவை என்பவர்

(A) தமிழ்நாட்டில் பிறந்தவராக மட்டுமே இருக்க வேண்டும்

(B) தமிழ்நாட்டிற்கு வெளியே பிறந்தவராகவும் இருக்கலாம்

(C) அவரது திருமணம் தமிழ்நாட்டில் நடந்திருத்தல் அவசியமாகும்

(D) அவரது பெற்றோர் தமிழ்நாட்டில் பிறந்திருந்தால் போதுமானது

9. The percentage to be set apart for women candidates in respect of all vacancies that are to be filled up through direct recruitment shall be

(A) 33 (B) 25

(C) 30 (D) 33.33

நேரடி நியமனம் மூலம் நிரப்பபட வேண்டிய பணியிடங்களில் மகளிருக்காக ஒதுக்கப்பட வேண்டிய பணியிடங்களின் சதவீதம்

(A) 33 (B) 25

(C) 30 (D) 33.33

10. The quorum for a meeting of the Tamil Nadu Public Service Commission shall be

(A) 2 (B) 4

(C) 3 (D) 6

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கூட்டங்களின் குறைவெண்வரம்பு ———— ஆகும்

(A) 2 (B) 4

(C) 3 (D) 6

11. The Commission may delegate any of its functions under the Constitution

(A) only to an individual member

(B) commission cannot delegate its functions

(C) only to a committee of members

(D) can delegate either to an individual member or to a committee of members

அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் தேர்வாணையம் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தை எவ்வகையில் பகிர்ந்தளிக்கலாம்

(A) தனிப்பட்ட உறுப்பினரிடம் மட்டும்

(B) தேர்வாணையம் தனது அதிகாரத்தை பகிர்ந்தளிக்க இயலாது

(C) உறுப்பினர் குழுவிடம் மட்டும்

(D) ஒரு தனிப்பட்ட உறுப்பினரிடமோ அல்லது உறுப்பினர் குழுவிடமோ பகிர்ந்தளிக்கலாம்

12. Consultation with Tamil Nadu Public Service Commission for removal of the name of a candidate from the list of candidates approved for appointment to a service prepared in consultation with the Commission is

(A) not necessary

(B) necessary

(C) the discretion of the appointing authority

(D) the discretion of the Government

தேர்வாணையத்துடன் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்ட நியமனத்திற்கான ஒப்புதலளிக்கப்பட்ட பட்டியலிலிருந்து ஒரு நபரின் பெயரை நீக்குவதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்தாலோசனை தேவையா?

(A) தேவையில்லை

(B) தேவையாகும்

(C) நியமன அலுவலரின் விருப்புரிமையாகும்

(D) அரசின் விருப்புரிமையாகும்

13. Along with the final orders of the Government in a disciplinary matter, the opinion of the Commission

(A) has to be communicated to the officer concerned

(B) need not to be communicated to the officer concerned

(C) whether to communicate or not is the discretion of the disciplinary authority

(D) whether to communicate or not is the decision to be taken by the administrative department

ஒழுங்கு நடவடிக்கைகளில் அரசினால் பிறப்பிக்கப்படும் இறுதி ஆணையுடன் தேர்வாணையத்தின் கருத்து இணைத்தனுப்பட்ட வேண்டுமா?

(A) பணியாளருக்கு தேர்வாணையத்தின் கருத்து தெரிவிக்கப்பட வேண்டும்

(B) பணியாளருக்கு தேர்வாணையத்தின் கருத்து தெரிவிக்கப்படத் தேவையில்லை

(C) பணியாளருக்கு தேர்வாணையத்தின் கருத்து தெரிவிக்கப்பட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது ஒழுங்கு நடிவடிக்கை அலுவலரின் விருப்புரிமையாகும்

(D) பணியாளருக்கு தேர்வாணையத்தின் கருத்து தெரிவிக்கப்பட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது அரசின் நிர்வாகத் துறையின் விருப்புரிமையகும்

14. Which one of the following is not a major penalty?

(A) dismissal

(B) removal

(C) compulsory retirement

(D) suspension

கீழ்வருவனவற்றுள் எது பெருந்தண்டனை அல்ல

(A) பணியறவு

(B) பணிநீக்கம்

(C) கட்டாய ஓய்வு

(D) பணியிடை நீக்கம்

15. Penalty for violation of rule relating to Bigamy

(A) any one of the major penalties

(B) Censure

(C) withholding of increments

(D) fine

இரு துணை மணம் குறித்த விதியை மீறுவதற்கு விதிக்கப்பட வேண்டிய தண்டனைகள் யாவை?

(A) பெருந்தண்டனைகளுள் ஏதேனும் ஒன்று

(B) கண்டனம்

(C) ஊதிய உயர்வை நிறுத்தி வைத்தல்

(D) அபராதம்

16. The penalty of 'Removal from service'

(A) Disqualifies future employment

(B) Does not bar future employment

(C) Guarantees employment in another service

(D) Transfer from one service to another service

பணிநீக்கம் எனும் தண்டனையின் விளைவு என்ன?

(A) எதிர் காலத்தில் வேலைவாய்ப்பிற்கு தகுதியிழப்பை ஏற்படுத்தும்

(B) எதிர் காலத்தில் வேலைவாய்ப்பிற்கு தடை புரியாது

(C) வேறொரு பணியில் வேலைவாய்ப்பை உறுதி செய்யும்

(D) தற்போதைய பணியிலிருந்து வேறொரு பணிக்கு மாற்றம் அளிக்கும்

17. The penalty of reduction to a lower post entails

(A) reduction to a lower post not lower than that to which he was directly recruited

(B) reduction to a lower post even lower than that to which he was directly recruited

(C) transfer to an equivalent non sensitive post in the same station

(D) posting to an equivalent non sensitive post in a different station

பதவி இறக்கம் என்ற தண்டனையின் விளைவு என்ன?

(A) நேரடி நியமனம் மூலம் ஒருவர் நியமிக்கப்பட்ட பதவியைவிட கீழான பதவி அல்லாமல் தற்போது வகிக்கும் பதவியை விட கீழ் பதவிக்கு பதவி இறக்கம் செய்யப்படுவார்

(B) நேரடி நியமனம் மூலம் ஒருவர் நியமிக்கப்பட்ட பதவியைவிட கீழான பதவிக்கும் பதவி இறக்கம் செய்யப்படுவார்

(C) ஒருவர் பணிபுரியும் பணிக்கு இணையான பணியில் அந்த இடத்திலேயே வேறொரு இடத்திற்கு கூர் உணர்வற்ற பணியிடத்தில் நியமனம் செய்யப்படுவார்

(D) ஒருவர் பணியுரியும் பணிக்கு இணையான பணியில் வேறொரு இடத்திற்கு கூர் உணர்வற்ற பணியிடத்தில் நியமனம் செய்யப்படுவார்

18. The penalty of 'fine' shall be imposed

(A) only on members of Tamil Nadu Basic Service

(B) on members of State Service only

(C) on members of Tamil Nadu Basic Service and on holders of certain post in various service

(D) on members of subordinate service only

அபராதம் என்ற தண்டனை எவருக்கெதிராக விதிக்கப்பட வேண்டும்?

(A) தமிழ்நாடு அடிப்படைப் பணியாளர்களுக்கெதிராக மட்டும் விதிக்கப்பட வேண்டும்

(B) மாநிலப் பணி அங்கத்தினர்களுக்கு எதிராக மட்டும் விதிக்கப்பட வேண்டும்

(C) தமிழ்நாடு அடிப்படைப் பணியாளர்களுக்கெதிராக மற்றும் சில பதவிகளை வகிக்கும் பல்வேறு பணிகளைச் சேர்ந்தவர்களுக்கெதிராகவும் விதிக்கப்படும்

(D) சார்நிலைப் பணியைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்கெதிராக மட்டும் விதிக்கப்படும்

19. If a probationer appointed by direct recruitment fails to acquire the test qualification even within the maximum period he shall then be

(A) Reverted

(B) Probation shall be terminated

(C) Shall be allowed further time of one year to acquire test qualification

(D) Shall be allowed further time of two years to acquire test qualification

நேரடி நியமனம் மூலம் நியமிக்கப்பட்ட ஒரு தகுதி காண் பருவத்தினர் அனுமதிக்கப்பட்ட அதிக பட்ச காலத்திற்குள்ளும் பரிந்துரைக்கப்பட்டுள்ள தேர்வுகளில் தேர்ச்சி பெறவில்லையெனில்

(A) அவர் பதவி இறக்கம் செய்யப்பட வேண்டும்

(B) அவரது தகுதி காண் பருவ காலம் ரத்து செய்யப்பட வேண்டும்

(C) தேர்வு தகுதி பெற மேலும் ஒரு வருட காலம் அனுமதிக்கலாம்

(D) தேர்வு தகுதி பெற மேலும் இரண்டு வருட காலம் அனுமதிக்கலாம்

20. The immediate superior state service officer to a member of a Subordinate Service who is not his appointing authority may impose any one of the following penalties upon that member of the Subordinate Service

(A) Censure
(B) Removal from service
(C) Reduction to lower rank
(D) Compulsory Retirement

சார்நிலை பணி அலுவலர் மீது அச் சார்நிலைப் பணி அலுவலருக்கு அடுத்த உடனடி மேல் நிலையில் உள்ள அவரது நியமன அலுவலர் அல்லாத மாநிலப் பணி அலுவலர் கீழ்க்கண்டவற்றுள் எந்த தண்டனையை விதிக்கலாம்?

(A) கண்டனம்
(B) பணி நீக்கம் செய்தல்
(C) பணி இறக்கம்
(D) கட்டாயப் பணி ஓய்வு

21. The penalty of reduction to a lower rank, removal and dismissal can be inflicted upon a member of the Subordinate Service

(A) only by the appointing authority
(B) by the appointing authority or any other higher authority
(C) only by the Government
(D) only by the administrative Department

கீழ் பதவிக்கு இறக்கம், பணிநீக்கம் மற்றும் பணியறவு ஆகிய தண்டனைகளை சார்நிலைப் பணி அலுவலர்கள் மீது விதிக்கத் தக்க அதிகாரம் படைத்தவர் யார்?

(A) நியமன அலுவலர் மட்டுமே
(B) நியமன அலுவலர் அல்லது அவரை விட மேல் நிலையிலுள்ள அலுவலர்
(C) அரசு மட்டுமே
(D) நிர்வாகத் துறை மட்டுமே

22. The power to impose the penalty of compulsory retirement, removal or dismissal upon a person whose services have been lent to another authority lies with

(A) the lending authority

(B) the authority to which his services have been lent

(C) administrative department of secretariat

(D) Government

கட்டாய பணி ஓய்வு, பணிநீக்கம் மற்றும் பணியறவு ஆகிய தண்டனைகளை வேறொரு தகவமைப்பில் பணிக் கடன் அடிப்படையில் பணிபுரிபவர் மீது விதிக்கத்தக்க அதிகாரம் கீழ்காண்பவற்றுள் எந்த அமைப்பிடம் உள்ளது?

(A) பணிக் கடன் அளித்த தகவமைப்பு

(B) பணிக் கடன் பெற்ற தகவமைப்பு

(C) தலைமைப் செயலகத்தின் நிர்வாகத் துறை

(D) அரசு

23. Before imposition of penalty under rule 8(i) to (iii), (v) and (ix) on a member of a service

(A) reasonable opportunity of making a representation may be given to him

(B) No opportunity need be given

(C) giving opportunity to make representation is the discretion of the disciplinary authority

(D) definite charges may be framed against him

தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு முறை மற்றும் மேல் முறையீடு) விதிகளின் விதி 8 (i) முதல் (iii), (v) மற்றம் (ix) ஆகியவற்றின் கீழ் உள்ள தண்டனைகளை விதிக்கும் முன்னர்

(A) முறையீடு செய்ய போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்க வேண்டும்

(B) முறையீடு செய்ய போதுமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்

(C) முறையீடு செய்ய போதுமான வாய்ப்பு அளிப்பது என்பது ஒழுங்கு நடவடிக்கை அலுவலரின் விருப்புரிமையாகும்

(D) அவர் மீது திட்டவட்டமான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டிருக்க வேண்டும்

24. Framing of charges for imposition of penalty under rule 8 (iv), (vi), (vii) and (viii) is

(A) necessary

(B) not necessary

(C) depending on the nature of delinquency

(D) discretion of the disciplinary authority

தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல் முறையீடு) விதிகளின் விதி 8(iv), (vi), (vii) மற்றும் (viii) இன் கீழ் தண்டனை விதிப்பதற்கு குற்றச்சாட்டுகள் வனையப்பட்டிருக்க வேண்டும் என்பது

(A) அவசியமாகும்

(B) அவசியமற்றதாகும்

(C) குற்றத்தின் தன்மையை பொறுத்ததாகும்

(D) ஒழுங்கு நடவடிக்கை அலுவலரின் விருப்புரிமையை பொறுத்ததாகும்

25. At the inquiry, in respect of allegations not admitted, the decision as to whether to call the oral witness or not

(A) lies with the Inquiry Officer

(B) lies with the witness

(C) lies with the delinquent

(D) discretion of the disciplinary authority

விசாரணையின் போது ஒப்புக் கொள்ளாத குற்றங்களைப் பொறுத்தவரையில் வாய் மொழி சாட்சியங்களை அனுமதிப்பதும் அனுமதிக்க மறுப்பதும்

(A) விசாரணை அலுவலரைப் பொறுத்தது

(B) சாட்சியங்களைப் பொறுத்தது

(C) குற்றஞ்சாட்டப்பட்ட பணியாளரைப் பொறுத்தது

(D) ஒழுங்கு நடவடிக்கை அலுவலரின் விருப்புமையைப் பொறுத்தது

26. Under the Tamil Nadu Civil Services (Disciplinary Proceedings Tribunal) Rules, 1955 the authority competent to refer cases to the Tribunal is

(A) Head of Office
(B) Head of Department
(C) Government
(D) High Court

1955-ல் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடிவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகளின் கீழ் தீர்ப்பாயத்திற்கு வழக்குகளை விசாரணைக்கு அனுப்ப அதிகாரம் படைத்தவர் எவர்?

(A) அலுவலகத் தலைவர்
(B) துறைத் தலைவர்
(C) அரசு
(D) உயர் நீதி மன்றம்

27. The period of military duty rendered by a probationer

(A) shall count for his period of probation
(B) shall not count for his period of probation
(C) will be considered as a break in service
(D) will be considered as leave to which he is eligible

ஒரு தகுதி காண் பருவத்தினரின் இராணுவப் பணிக்காலம்

(A) அவரது தகுதி காண் பருவகாலம் கணக்கிட எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்
(B) அவரது தகுதி காண் பருவ காலம் கணக்கிட எடுத்துக் கொள்ளப்படக் கூடாது
(C) அக் காலம் பணி முறிவுக் காலாமாக கணக்கில் கொள்ள வேண்டும்
(D) அக் காலத்தை அவருக்கு தகுதியுள்ள விடுப்புக் காலமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்

28. The cases referred to a Tribunal and pending before that Tribunal

(A) Can only be transferred to another Tribunal
(B) Cannot be transferred to another Tribunal
(C) Can be withdrawn and transferred to another Tribunal
(D) Cannot be withdrawn and transferred to another Tribunal

ஒரு ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயத்திற்கு விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மற்றும் விசாரணை நடத்தப்பட்டு வரும் வழக்குகளை

(A) பிறிதொரு தீர்ப்பாயத்திற்கு மாற்றம் மட்டுமே செய்யலாம்
(B) பிறிதொரு தீர்ப்பாயத்திற்கு மாற்றம் செய்ய இயலாது
(C) திரும்பப் பெறப்பட்டு பிறிதொரு தீர்ப்பாயத்திற்கு மாற்றம் செய்யப்படலாம்
(D) திரும்பப் பெறவும் பிறிதொரு தீர்ப்பாயத்திற்கு மாற்றம் செய்யப்படவும் இயலாது

29. After completing the enquiry the Disciplinary Proceedings Tribunal shall send its findings to

(A) Directorate of Vigilance & Anti Corruption

(B) Vigilance Commission

(C) Head of Department

(D) Government

விசாரணை முடிவுற்ற பின்னர் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம் தனது கண்டறிதல்களை யாருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்

(A) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்

(B) விழிப்புப் பணி ஆணையம்

(C) துறைத் தலைவர்

(D) அரசு

30. The competent authority to impose penalty in respect of cases enquired into by the Disciplinary Proceedings Tribunal relating to officers of the Subordinate Service who belong to different departments but are jointly involved in a case is

(A) Directorate of Vigilance & Anti Corruption

(B) Vigilance Commission

(C) Head of Department

(D) Government

ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்தால் விசாரணை செய்யப்பட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆனால் இணைந்து ஒரு குற்றச் செயலை புரிந்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள சார்நிலை அலுவலர்கள் மீது தண்டனை விதிக்க தகுதி வாய்ந்த அமைப்பு எது?

(A) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்

(B) விழிப்புப் பணி ஆணையம்

(C) துறைத் தலைவர்

(D) அரசு

31. In respect of cases where the Disciplinary Proceedings Tribunal has held the charges as proved, a copy of the findings of the Tribunal

(A) shall be communicated to the delinquent officer

(B) shall be communicated to all the witnesses

(C) need not be communicated to the delinquent officer

(D) Shall be communicated to the DVAC

ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயத்தால் நிரூபிக்கப்பட்டதாக கண்டறியப்பட்ட வழக்களில் தீர்ப்பாயத்தின் கண்டறிதல்களின் நகல்

(A) குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்ட வேண்டும்

(B) அனைத்து சாட்சியங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்

(C) குற்றஞ்சாட்டப் பட்ட அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்

(D) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்திற்கு மட்டும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்

32. The committee on Appeals can render advice to

(A) The head of department
(B) The Government
(C) The vigilance commissioner
(D) The TNPSC

மேல் முறையீடு குழு தனது பரிந்துரைகளை யாருக்கு அளிக்க வேண்டும்

(A) துறைத் தலைவருக்கு

(B) அரசுக்கு

(C) விழிப்புப் பணி ஆணையருக்கு

(D) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு

33. In cases where the acquittal of the Officer concerned is proposed on the findings of the Tribunal, the disciplinary authority shall supply to the Officer along with the final order passed

(A) a copy of the report of the Tribunal

(B) a copy of the deposition of the witnesses

(C) enquiry report of the directorate of vigilance and Anti corruption

(D) recommendations of the vigilance commission

ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயத்தின் கண்டறிதல்களின் அடிப்படையில் ஒரு அதிகாரியை குற்றங்களிலிருந்து விடுவிக்க உத்தேசிக்கப்பட்டு இறுதி ஆணையம் பிறப்பிக்கப் பட்டிருந்தால் அவ்வாணையுடன் கீழ்க்கண்டவற்றுள் எதனை அவ்வதிகாரிக்கு ஒழுங்கு நடவடிக்கை அலுவலரால் அனுப்பி வைக்க வேண்டும்?

(A) தீர்ப்பாயத்தின் அறிக்கையின் நகல்

(B) சாட்சியங்களின் வாக்குமூலங்களின் நகல்

(C) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தின் விசாரணை அறிக்கையின் நகல்

(D) விழிப்புப் பணி ஆணையத்தின் பரிந்துரையின் நகல்

34. 'Appointment by transfer' means appointment of a member of a service

(A) From one category to another category in the same service

(B) From one category to another category in another service

(C) From one station to another station

(D) From one office to another office

மாறுதல் மூலம் நியமனம் என்பது ஒரு அங்கத்தினரை ஒரு பணிக்கு கீழ்க்கண்டவற்றுள் ஒரு முறையில் நியமிப்பதாகும்

(A) ஒரு வகையிலிருந்து மற்றொரு வகைக்கு அதே பணியில் மாற்றம்

(B) ஒரு வகையிலிருந்து வேறொரு பணியில் மற்றொரு வகைக்கு மாற்றம்

(C) ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றம்

(D) ஒரு அலுவலகத்திலிருந்து மற்றொரு அலுவலகத்திற்கு மாற்றம்

35. 'Appointed to a service' means

(A) Appointed for the first time for discharging the duties of a post

(B) Regularisation of service

(C) Confirmation

(D) Declaration probation

ஒரு பணியில் நியமனம் என்பது

(A) ஒரு பணிக்கான வேலைகளை புதிய முதன் முறையாக நியமிக்கப்படுவது

(B) பணி வரன்முறை செய்வது

(C) உறுதிப்படுத்துதல்

(D) தகுதிகாண் பருவம் விளம்புதல்

36. 'Approved candidate' means

(A) A candidate whose name appears in an authoritative list of candidates approved for appointment

(B) A candidate who has completed his period of probation

(C) A candidate whose services have been regularised in the post

(D) A candidate whose name has been cleared for appointment by the directorate of vigilance and anti corruption

ஏற்கப்பட்ட பணி வேட்பாளர் என்றால் என்ன பொருள்?

(A) எவரொருவரின் பெயர் பணி நியமனத்திற்காக ஏற்பளிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெறுதோ அவர்

(B) தகுதி காண் பருவம் முடித்தவர்

(C) பணி வரன்முறைப்படுத்தப்பட்டவர்

(D) ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்கத்தால் பணி நியமனத்திற்காக ஒப்புதலளிக்கப்பட்டவர்

37. 'Approved probationer' means member of a service who is

(A) awaiting appointment as a full member of such service

(B) probationer in a service

(C) Awaiting regularisation of service

(D) Awaiting initial appointment to a service

தகுதிகாண் முடித்த ஒரு பணியின் அங்கத்தினர்

(A) முழு உறுப்பினராக பணி நியமனத்திற்காக காத்திருப்பவர்

(B) ஒரு பணியில் தகுதி காண் பருவத்தினராக உள்ளவர்

(C) ஒரு பணியில் பணி வரன்முறைக்காக காத்திருப்பவர்

(D) ஒரு பணியில் ஆரம்ப கட்ட நியமனத்திற்காக காத்திருப்பவர்

38. 'Full member' means a member whose services have been

(A) confirmed
(B) regularised
(C) dismissed
(D) discharged

ஒரு பணியில் முழு உறுப்பினர் என்பவர்

(A) பணி உறுதியாக்கப்பட்டவர்
(B) பணி வரன்முறைபடுத்துப்பட்டவர்
(C) பணியறவு செய்யப்பட்டவர்
(D) விடுவிக்கப்பட்டவர்

39. 'Military Duty' means duty involving subjection to

(A) Military only
(B) Either military or Naval only
(C) Military, Naval or Air force
(D) Either military of Air force only

இராணுவப் பணி என்பது

(A) இராணுவப் பணிபுரிவது மட்டும்

(B) இராணுவ அல்லது கடற்படைப் பணி புரிவது மட்டும்

(C) இராணுவ, கடற்படை மற்றும் வான்படை பணி புரிவது

(D) இராணுவ அல்லது வான் படை பணி புரிவது மட்டும்

40. For the purpose of calculating the period of probation of a probationer

(A) completed years shall be first calculated

(B) completed months shall be first calculated

(C) completed days shall first be calculated

(D) completed weeks shall be first calculated

ஒரு தகுதி காண் பருவத்தினரின் தகுதி காண் பருவ காலம் கணக்கிட

(A) நிறைவு செய்த ஆண்டுகளை முதலில் கணக்கிட வேண்டும்

(B) நிறைவு செய்த மாதங்களை முதலில் கணக்கிட வேண்டும்

(C) நிறைவு செய்த நாட்களை முதலில் கணக்கிட வேண்டும்

(D) நிறைவு செய்த வாரங்களை முதலில் கணக்கிட வேண்டும்

41. 'Probationer in a service' means a member of that service who

(A) Has been placed on probation

(B) Has completed is probation

(C) Has been selected for appointment

(D) Has completed period of probation in yet another service

ஒரு பணியின் உறுப்பினர் அப் பணியில் தகதி காண் பருவத்தினர் என குறிப்பிடப்பட்டால் அதன் பொருள், அவர் —————— என்பதாகும்

(A) தகுதி காண் பருவத்தில் வைக்கப்பட்டுள்ளார்

(B) தகுதி காண் பருவம் முடித்துவிட்டார்

(C) அவர் பணி நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

(D) பிறிதொரு பணியில் அவர் தகுதி காண் பருவக் காலம் முடித்துள்ளார்

42. Appointment of a member of any category to a higher category of a service is

(A) Promotion

(B) Appointment by transfer

(C) Recruitment by transfer

(D) Transfer

ஒரு வகையைச் சேர்ந்த உறுப்பினரை உயர் வகைக்கு நியமிப்பது என்பது —————— ஆகும்

(A) பதவி உயர்வு

(B) மாறுதல் அடிப்படையில் நியமனம்

(C) மாறுதல் அடிப்படையில் பணியமர்த்தம்

(D) மாறுதல்

43. In cases where the first appointment to a service has to be made in consultation with the commission that is termed as

(A) Direct recruitment (B) Promotion

(C) Recruitment by transfer (D) Appointment on transfer

ஒரு பணிக்கு முதல் நியமனம் தேர்வாணையத்துடன் கலந்தாலோசித்து செய்யப்படும் போது அது ———————— எனப்படும்

(A) நேரடி நியமனம்

(B) பதவி உயர்வு

(C) மாறுதல் அடிப்படையில் பணியமர்த்தம்

(D) மாறுதல் அடிப்படையில் நியமனம்

44. As per the proviso to section 3(r) of Tamil Nadu Government servants' (conditions of service) Act, 2016, a person is deemed to be not in the service of the Government if,

(A) A period of three years has not elapsed since his first appointment to a service of the government

(B) A period of five years has not elapsed since his first appointment to a service of the Government

(C) A period of seven years has not elaspsed since his first appointment to a service of the Government

(D) A period of nine years has not elapsed since his first appointment to a service of the Government

தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 இன் சட்டப் பிரிவு 3(r) இன் காப்புரையின்படி ஒரு நபர் அரசுப் பணியில் இல்லை என கருதப்பட வேண்டுமாயின்

(A) அரசுப் பணியில் அவரது முதல் நியமனத்திலிருந்து மூன்று ஆண்டு காலம் கடந்திருக்கக் கூடாது

(B) அரசுப் பணியில் அவரது முதல் நியமனத்திலிருந்து ஐந்து ஆண்டு காலம் கடந்திருக்கக் கூடாது

(C) அரசுப் பணியில் அவரது முதல் நியமனத்திலிருந்து ஏழு ஆண்டு காலம் கடந்திருக்கக் கூடாது

(D) அரசுப் பணியில் அவரது முதல் நியமனத்திலிருந்து ஒன்பது ஆண்டு காலம் கடந்திருக்கக் கூடாது

45. Tamil Nadu public service commission, teachers recruitment board, Tamil Nadu uniformed services recruitment Board and such other bodies constituted by the government for selection of candidates for appointment to any service are

(A) Recruitment agencies
(B) Appointment agencies
(C) Selecting agencies
(D) Recruitment authorities

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் பணிக்காக பணி நாடுநர்களை தேர்ந்தெடுப்பதற்காக அமைக்கப்பட்ட இதர அமைப்புகள் ———————— ஆகும்

(A) பணியமர்த்த முகமைகள்
(B) நியமன முகமைகள்
(C) தேர்ந்தெடுக்கும் முகமைகள்
(D) பணியமர்த்தும் தகவமைப்பு

46. 'Reserve list' means a list which is prepared so as to contain not less than

(A) 5% of the candidates of each reservation group in the regular list
(B) 10% of the candidates of each reservation group in the regular list
(C) 15% of the candidates of each reservation group in the regular list
(D) 25% of the candidates of each reservation group in the regular list

காப்புப் பட்டியலில் குறைந்த பட்சம் இடம் பெற வேண்டிய எண்ணிக்கை

(A) முறையான பட்டியலில் இடம் பெறும் ஒவ்வொரு இட ஒதுக்கீட்டு தொகுதியிலும் 5 சதவீதம்
(B) முறையான பட்டியலில் இடம் பெறும் ஒவ்வொரு இடஒதுக்கீட்டு தொகுதியிலும் 10 சதவீதம்
(C) முறையான பட்டியலில் இடம் பெறும் ஒவ்வொரு இட ஒதுக்கீட்டு தொகுதியிலும் 15 சதவீதம்
(D) முறையான பட்டியலில் இடம் பெறும் ஒவ்வொரு இட ஒதுக்கீட்டு தொகுதியிலும் 25 சதவீதம்

47. Reserve list shall be in force

(A) for 1 year

(B) until the regular list is exhausted

(C) until the reserve list is exhausted

(D) until the subsequent regular list is drawn

காப்புப் பட்டியல் எத்தனை காலம் நடைமுறையில் இருக்கும்

(A) 1 ஆண்டுக்கு

(B) முறையான பட்டியல் முழுமையாக பயன்படுத்தித் தீர்க்கும் வரை

(C) காப்புப் பட்டியல் முழுமையாக பயன்படுத்தித் தீர்க்கும் வரை

(D) அடுத்த முறையான பட்டியல் தயாரிக்கும் வரை

48. Of the following religions as per the rules in force, any person who professes ———————— religion can only be deemed to be a member of a scheduled caste.

(A) Hinduism

(B) Christianity

(C) Muslim

(D) Jainism

தற்போது நடைமுறையிலுள்ள விதிகளின்படி கீழ்க்காணும் மதங்களுள் ஒன்றை பின்பற்றுபவர்தான் பட்டியல் வகுப்பை சேர்ந்தவர் என கருதப்படுவார்

(A) இந்து மதம்

(B) கிருத்துவ மதம்

(C) முகமதிய மதம்

(D) ஜைன மதம்

49. A group of persons classified by the Government as a state service or subordinate service as the case may be is

(A) A Service

(B) A department

(C) An office

(D) An unit

மாநிலப் பணி அல்லது சார்நிலைப் பணி என வகைப்படுத்தப்பட்ட ஒரு தனி நபர்கள் அடங்கிய தொகுதியானது ———————— எனப்படும்

(A) ஒரு பணி

(B) ஒரு துறை

(C) ஒரு அலுவலகம்

(D) ஒரு அலகு

50. Service of any kind in a unit or formation liable for service overseas or in any operational area or in the INA can be termed as

(A) Military duty
(B) War service
(C) Military service
(D) War duty

கடல் கடந்த பணிக்கோ அல்லது போர் நடவடிக்கைப் பகுதியிலோ ஒரு அலகிலோ அல்லது போர் அமைப்பிலோ அல்லது இந்திய தேசியப் படையிலோ புரியும் பணியே ———— எனப்படும்

(A) இராணுவ அலுவல்
(B) போர்ப் பணி
(C) இராணுவப் பணி
(D) போர் அலுவல்

51. Persons holding posts under the government are classifed into

(A) 2 groups
(B) 3 groups
(C) 4 groups
(D) 5 groups

அரசுப் பணியாளர்கள் எத்தனை வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்

(A) 2 வகை
(B) 3 வகை
(C) 4 வகை
(D) 5 வகை

52. All first appointments in any state or subordinate service shall be made from a list of approved candidates by

(A) the appointing authority
(B) the TNPSC
(C) the immediate higher officer
(D) the district level officer

மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கு செய்யப்படும் முதல் நியமனங்கள் அனைத்தும் ஒப்புதலளிக்கப்பட்ட நபர்கள் பட்டியலிலிருந்து ———— செய்யப்பட வேண்டும்

(A) நியமன அலுவலர்
(B) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால்
(C) அடுத்த உயர்நிலை அதிகாரியால்
(D) மாவட்ட அளவிலான அலுவலரால்

53. The list of approved candidates shall be communicated only to

(A) Persons whose name are found in the list

(B) Persons whose name are found in the list as well as to persons senior to the junior most person included in the list whose names have not been included in the list

(C) The senior most person included in the list

(D) The junior most person included in the list.

ஒப்புதலளிக்கப்பட்ட நபர்கள் பட்டியலானது ———————— அனுப்பி வைக்கப்பட வேண்டும்

(A) அப்பட்டியலில் பெயர் இடம் பெற்றுள்ள நபர்களுக்கு மட்டும்

(B) அப்பட்டியலில் பெயர் இடம் பெற்றுள்ள நபர்களுக்கு மற்றும் அப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பணியில் இளைய நபருக்கு பணியில் மூத்த நபர்கள் எவருடைய பெயரேனுடம் அப்பட்டியலில் சேர்க்கப்படாமல் இருந்தால் அவர்களுக்கும்

(C) அப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள முதுநிலையில் மூத்த நபருக்கு மட்டும்

(D) அப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள முதுநிலையில் இளைய நபருக்கு மட்டும்

54. While preparing the estimate of vacancies the number of posts that shall be taken into account are

(A) total number of permanent posts only

(B) total number of permanent and temporary posts only

(C) total number of permanent, temporary and the anticipated sanction of new posts only

(D) total number of permanent, temporary, anticipated sanction of new posts, leave reserve, retirement and promotion posts

காலிப் பணியிட மதிப்பீடு தயாரிக்கும் போது கருத்தில் எடுத்துக் கொள்ள .வேண்டிய பணியிடங்களாவன

(A) மொத்தமுள்ள நிலையான பனியிடங்கள் மட்டும்

(B) மொத்தமுள்ள நிலையான மற்றும் தற்காலிக பணியிடங்கள் மட்டும்

(C) மொத்தமுள்ள நிலையான, தற்காலிகமான மற்றும் ஒப்பளிப்பு எதிர்நோக்கப்படும் புதிய பணியிடங்கள் ஆகியவை மட்டும்

(D) மொத்தமுள்ள நிலையான, தற்காலிகமான மற்றும் ஒப்பளிப்பு எதிர்நோக்கப்படும் புதிய பணியிடங்கள், விடுப்புக் காப்பு, பணி ஓய்வு மற்றும் பதவியுயர்வு ஆகிய பணியிடங்கள்

55. The list of approved candidates prepared for appointment by promotion and for recruitment by transfer shall lapse after

(A) 6 months
(B) 1 year
(C) 2 years
(D) 3 years

பதவியுயர்விற்கும் மாறுதல் முறையிலான பணியமர்த்தத்திற்குமான ஒப்புதலளிக்கப்பட்ட நபர்கள் பட்டியலானது காலாவதியாகும் காலாமானது

(A) 6 மாதங்கள்
(B) 1 ஆண்டு
(C) 2 ஆண்டுகள்
(D) 3 ஆண்டுகள்

56. Number of qualified candidates to be considered for preparing the list of approved candidates when the number of vacancies arrived at is 15 is

(A) 15
(B) 20
(C) 25
(D) 30

காலிப் பணியிட மதிப்பீடு 15 என கணக்கிடப்பட்டுள்ள போது ஒப்புதலளிக்கப்பட்டுள்ள நபர்கள் பட்டியல் தயாரிக்க கருதப்பட வேண்டிய தகுதியுள்ள நபர்களின் எண்ணிக்கை

(A) 15
(B) 20
(C) 25
(D) 30

57. The period of validity for the list of approved candidates shall be reckoned from

(A) the date of approval of the panel
(B) the crucial date for preparation of the list
(C) the date of appointment of the first person in the list to the post for which the list was drawn
(D) the date of appointment of the last person in the list to the post for which the list was drawn

ஒப்புதலளிக்கபட்ட நபர்கள் பட்டியல் செயலில் இருக்கும் காலாமானது ———————— கணக்கிடப்பட வேண்டும்

(A) அப்பட்டியல் ஒப்புதலளிக்கப்பட்ட நாளிலிருந்து
(B) அப்பட்டியல் தயாரிக்க அறுதியிட்ட நாளிலிருந்து
(C) அப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள முதல் நபர் அப்பட்டியல் தயாரிக்கப்பட்டதற்கான பதவியில் நியமிக்கப்படும் நாளிலிருந்து
(D) அப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள கடைசி நபர் அப்பட்டியல் தயாரிக்கப்பட்டதற்கான பதவியில் நியமிக்கப்படும் நாளிலிருந்து

58. While preparing the list of approved candidates for filling up the vacancies in the post of Head of Department, the number of names of qualified candidates to be considered shall be fixed as

(A) the actual number of vacancies

(B) twice the number of vacancies

(C) twice the number of vacancies plus three

(D) thrice the number of vacancies

துறைத் தலைவர் பதவிக்காக ஒப்புதலளிக்கப்பட்ட நபர் பட்டியல் தயாரிக்கும் போது கருதப் படவேண்டிய தகுதி வாய்ந்த நபர்களின் எண்ணிக்கையானது

(A) தற்போதுள்ள காலியிடங்களின் எண்ணிக்கை மட்டும்

(B) காலிப் பணியிடங்களின் இரு மடங்கு

(C) காலிப் பணியிடங்களின் இரு மடங்கு மற்றும் 3

(D) காலிப் பணியிடங்களின் மும்மடங்கு

59. In respect of posts for which the consultation of the commission is not required

(A) temporary list shall not be prepared

(B) temporary list shall be prepared

(C) regular list need not be prepared

(D) both regular and temporary list be prepared

தேர்வாணையத்துடன் கலந்தாலோசனை தேவைப்படாத பணியிடங்களுக்கு

(A) தற்காலிகப் பட்டியல் தயாரிக்கப்படக் கூடாது

(B) தற்காலிகப் பட்டியல் தயாரிக்கப் படவேண்டும்

(C) முறையான பட்டியல் தயாரிக்கப்படக் கூடாது

(D) முறையான மற்றும் தற்காலிகப் பட்டியல் இரண்டுமே தயாரிக்கப்படலாம்

60. The inclusion of a candidate's name in any list of approved candidates for any class or category in a service

(A) confers on him any claim to appointment

(B) shall not confer on him any claim to appointment

(C) will confer right of regularisation from the date of such regularisation in that post

(D) renders him eligible for drawal of increment reckoned from the date of such inclusion

ஒப்புதலளிக்கப்பட்ட பெயர் பட்டியலில் ஒரு நபரின் பெயரை சேர்ப்பதென்பது, அவருக்கு

(A) நியமனம் கோர உரிமை அளிக்கிறது

(B) நியமனம் கோர உரிமை ஏதும் அளிக்கவில்லை

(C) அவ்வாறு சேர்க்கப்பட்ட நாளிலிருந்து பணி வரன்முறை கோர உரிமையளிக்கிறது

(D) அவ்வாறு சேர்க்கப்பட்ட நாளிலிருந்து ஊதிய உயர்வு அளிக்க அவரை தகுதியுடையவராக்குகிறது

61. An approved candidate selected by the commission for appointment by direct recruitment ordinarily has to join duty with in ———— from the date of receipt of order directing him to join for not forfeiting his right for appointment.

(A) 1 month

(B) 2 months

(C) 3 months

(D) 4 months

தேர்வாணையத்தால் நேரடி நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒரு ஏற்பளிக்கப்பட்ட பணி வேட்பாளர் அவரை பணியில் சேருமாறு பணிக்கும் ஆணை கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து பொதுவாக ———— காலத்திற்குள் பணியில் சேர்ந்தால் அவரது பணிநியமன உரிமையை இழக்க மாட்டார்.

(A) 1 மாதம்

(B) 2 மாதங்கள்

(C) 3 மாதங்கள்

(D) 4 மாதங்கள்

62. Under special circumstances, the appointing authority may extend the time limit for joining duty by a candidate selected by the commission upto

(A) 2 months (B) 3 months

(C) 6 months (D) 8 months

தேர்வாணையத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட நபர் பணியில் சேர்வதற்கான கால அவகாசத்தை நியமன அலுவலர் சில சிறப்பு நேர்வுகளில் ———— காலம் வரை நீட்டிக்காலம்

(A) 2 மாதங்கள் (B) 3 மாதங்கள்

(C) 6 மாதங்கள் (D) 8 மாதங்கள்

63. Under exceptional circumstances if a direct recruit candidate is allowed to join duty beyond ———— months and in that case, his seniority shall be fixed

(A) 4, at the original place (B) 6, below the junior most candidate

(C) 4, below the junior most candidate (D) 6, at the original place

மிக அரிதான சந்தர்ப்பங்களில் நேரடி நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் பணியில் சேர ———— கால அவகாசம் வரை அளிக்கப்படும். அவ்வாறு அவர் சேர்ந்தபின் அவரது முதுநிலையானது

(A) 4 மாதம்-முன்னர் இருந்த இடத்திலேயே இருக்கும்

(B) 6 மாதம்-அனைத்து நபர்களுக்கும் இளையவரான நபருக்கு அடுத்த கீழ் நிலையில்

(C) 4 மாதம்-அனைத்து நபர்களுக்கும் இளையவரான நபருக்கு அடுத்த கீழ் நிலையில்

(D) 6 மாதம்-முன்னர் இருந்த இடத்திலேயே இருக்கும்

64. For want of vacancy ——————— shall be discharged ———————

(A) probationers only, in the order of seniority

(B) probationers and approved probationers only, in the order of juniority

(C) probationers, approved probationers and full members, in the order of seniority

(D) probationer, approved probationers and full members, in the order of juniority

பணியிடம் காலியின்மை காரணமாக ——————— ஐ பணியிலிருந்து ——————— விடுவிக்கப்படலாம்

(A) தகுதிகாண் பருவத்தினர் மட்டும் முதுநிலைப்படி

(B) தகுதி காண் பருவத்தினர் மற்றும் தகுதி காண் பருவம் முடித்தவர்கள்-இளநிலைப்படி

(C) தகுதிகாண் பருவத்தினர், தகுதி காண் பருவம் முடித்தவர்கள் மற்றும் முழு உறுப்பினர்கள்-முதுநிலைப்படி

(D) தகுதிகாண் பருவத்தினர், தகுதி காண் பருவம் முடித்தவர்கள் மற்றும் முழு உறுப்பினர்கள்-இளநிலைப்படி

65. For appointment on compassionate grounds

(A) the rule of reservation shall apply

(B) the rule of reservation shall not apply

(C) rule of reservation not to be applied in the case of appointment of the spouse of the deceased government servant only

(D) rule of reservation not to be applied in the case of appointment of the children of the deceased government servant only

கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கு

(A) இடஒதுக்கீடு விதி பின்பற்றப்பட வேண்டும்

(B) இட ஒதுக்கீடு விதி பின்பற்றத் தேவையில்லை

(C) இட ஒதுக்கீடு விதியை இறந்த அரசு ஊழியரின் கணவன் அல்லது மனைவிக்கு கருணை அடிப்படை பணி நியமனம் அளிக்கும் போது மட்டும் பின்பற்றத் தேவையில்லை

(D) இட ஒதுக்கீடு விதியை இறந்த அரசு ஊழியரின் மகன் அல்லது மகளுக்கு கருணை அடிப்படை பணி நியமனம் அளிக்கும் போது மட்டும் பின்பற்றத் தேவையில்லை

66. The maximum age limit for appointment on compassionate grounds in respect of wife or husband of the Government servant who died in harness shall be

(A) 40 years
(B) 45 years
(C) 50 years
(D) 35 years

பணியில் இருக்கும் போது இறந்த அரசு ஊழியரின் கணவன் அல்லது மனைவிக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் அளிக்க அதிக பட்ச வயது வரம்பு

(A) 40 ஆண்டுகள்
(B) 45 ஆண்டுகள்
(C) 50 ஆண்டுகள்
(D) 35 ஆண்டுகள்

67. For the purpose of considering the maximum age limit for appointment on compassionate grounds ———————— shall be taken into account.

(A) the date of death of the Government servant
(B) the date of application for appointment on compassionate grounds
(C) the date of attaining majority of children
(D) the date of superannuation of the Government servant had he been alive

கருணை அடிப்படையில் பணி நியமனம் அளிக்க அதிக பட்ச வயது கணக்கிட ———————— கருத்தில் கொள்ளப்பட வேண்டும்

(A) அரசு ஊழியர் இறந்த நாள்
(B) கருணை அடிப்படையிலான பணி நியமனம் கோரி விண்ணப்பித்த நாள்
(C) விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி செய்த நாள்
(D) உயிருடன் இருந்திருப்பாரேயானால் அரசு ஊரியர் பணி ஓய்வு பெறும் நாள்

68. For the purpose of appointment on compassionate ground the expression sons and daughters includes

(A) Legally adopted son or daughter of the Government servant

(B) Son or daughter of the brother of the Government servant

(C) Son or daughter of the sister of the Government servant

(D) Grandson or granddaughter of the Government servant

கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க ———————— கருதப்படலாம்

(A) அரசு ஊழியரின் சட்டப்படி தத்தெடுக்கப்பட்ட மகன் அல்லது மகள்

(B) அரசு ஊழியரின் சகோதரரின் மகன் அல்லது மகள்

(C) அரசு ஊழியரின் சகோரரியின் மகன் அல்லது மகள்

(D) அரசு ஊழியரின் பேரன் அல்லது பேத்தி

69. For the purpose of Tamil Nadu Government Servant's (conditions of service) Act, 2016 'outstanding scout' is one

(A) who has received the chief ministers' award

(B) who has received the prime ministers' award

(C) who has received the presidents' award

(D) who has received state award for best scout

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 இன் படி மிக சிறந்த சாரணர் என்பவர் எவர்?

(A) முதலமைச்சரின் விருது பெற்றவர்

(B) பிரதம மந்திரியின் விருது பெற்றவர்

(C) குடியரசுத் தலைவரின் விருது பெற்றவர்

(D) மாநிலத்தின் மிகச் சிறந்த சாரணர் என விருது பெற்றவர்

70. For recruitment to posts which are outside the purview of the commission, recruitment shall be made

(A) By calling for names of eligible candidates from employment exchange only

(B) By inviting applications through advertisement in dailies only

(C) Both by calling for names from employment exchange and by inviting applications through advertisements in dailies

(D) Only on compassionate grounds

தேர்வாணையத்தின் வரம்பிற்குட்படாத பதவிகளுக்கு ———————— நியமனம் செய்ய வேண்டும்

(A) வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதியுடைய நபர்கள் பெயரை மட்டுமே பெற்று

(B) நாளிதழ்களில் விளம்பரம் செய்து விண்ணப்பங்கள் பெற்று

(C) வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்தும் நாளிதழ்களில் விளம்பரம் செய்தும் விண்ணப்பங்கள் பெற்று

(D) கருணை அடிப்படையில் மட்டுமே

71. When an enquiry in the tribunal for disciplinary proceedings is pending against a Government servant he

(A) may be included in the approved list

(B) will not be included in the approved list

(C) may be included in the approved list but not given promotion till finalisation of enquiry

(D) may be given promotion temporarily

ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாரியத்தின் விசாரணை ஒரு அரசு ஊழியருக்கெதிராக நிலுவையில் இருக்கும் போது, அவர்

(A) ஏற்பளிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்படலாம்

(B) ஏற்பளிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்படமாட்டார்

(C) ஏற்பளிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்படலாம் ஆனால் பதவி உயர்வு என்பது விசாரணை முடிவுற்ற பின்னரே வழங்கப்பட வேண்டும்

(D) அவருக்கு பதவி உயர்வு தற்காலிகமாக வழங்கப்படலாம்

72. For the purpose of the Tamil nadu Government servants (conditions of service) Act "a destitute widow" shall mean a widow whose total monthly income from all sources shall not be more than

(A) Rs. 2000 (B) Rs. 3000

(C) Rs. 4000 (D) Rs. 5000

தமிழ்நாடு அரசுப் பணியளார் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் படி ஆதரவற்ற விதவை என்பவரின் மாத வருமானம் அவரது அனைத்து ஆதாரங்களிலிருந்தும் ______ க்கு மிகாமல் இருக்க வேண்டும்

(A) ரூ. 2000 (B) ரூ. 3000

(C) ரூ. 4000 (D) ரூ. 5000

73. In the case of recruitment to a post for which the educational qualification prescribed is minimum general educational qualification and above, a person is deemed to have adequate knowledge of the official language of the state if

(A) he has secured a mere pass in the SSLC examination or its equivalent with Tamil as one of the languages

(B) he has secured more than 60% of marks in the SSLC examination or its equivalent with the said language as one of the languages

(C) he has secured a pass in the SSLC examination or its equivalent with both Tamil and English as languages

(D) he has secured more than 60% marks in the SSLC examination or its equivalent with both Tamil and English as languages

பணியிடம் ஒன்றில் பணியமர்த்தப்படுவதற்கு குறைந்த பட்ச கல்வித் தகுதியோ அல்லது அதற்கு மேலான தகுதியோ கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தால், அப்பிணியில் அமர்த்தப்படுவதற்கு ஒருவர் அரசின் அலுவல் மொழியில் போதுமான தகுதி பெற்றிருப்பதாக கருதப்பட அவர்

(A) எஸ்.எஸ்.எல்.சி. அல்லது அதற்கு இணையான தேர்வில் தமிழை ஒரு மொழிப்பாடமாகக் கொண்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

(B) எஸ்.எஸ்.எல்.சி அல்லது அதற்கு இணையான தேர்வில் தமிழை ஒரு மொழிப்பாடமாகக் கொண்டு 60 சதவீதம் மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

(C) எஸ்.எஸ்.எல்.சி. அல்லது அதற்கு இணையான தேர்வில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தை மொழிப் பாடங்களாகக் கொண்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

(D) எஸ்.எஸ்.எல்.சி அல்லது அதற்கு இணையான தேர்வில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தை மொழிப்பாடங்களாகக் கொண்டு 60 சதவீதம் மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

74. A probationer before commencing his probation has acquired special qualification prescribed by the Special Rules. Whether he has to acquire this special qualification again after commencement of his probation?

(A) No

(B) Yes

(C) It is the discretion of the appointing authority

(D) It is the decision to be taken by the probationer

தகுதி காண் பருவத்தினர் ஒருவர் தனது தகுதி காண் பருவத்தை துவங்குவதற்கு முன்னர் அவர் வகிக்கும் பதவிக்குரிய சிறப்பு விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள சிறப்புத் தகுதி ஒன்றை பெற்றுள்ளார். அவர் அச் சிறப்புத் தகுதியை தனது தகுதி காண் பருவன் துவங்கிய பின்னர் பிறிதொரு முறை பெற வேண்டுமா?

(A) இல்லை

(B) ஆம்

(C) அது நியமன அலுவலரின் விருப்புரிமையைப் பொறுத்தது

(D) அது அத் தகுதி காண் பருவத்தினரின் விருப்புரிமையைப் பொறுத்தது

75. In institutions or establishments specially provided for women

(A) Women alone shall be appointed

(B) Men alone be appointed

(C) Men may be appointed when suitable women are not available

(D) Women may be appointed only when suitable men are not available

மகளிருக்காக அமைக்கப்பட்டுள்ள அமைப்புகளிலோ அல்லது நிறுவனங்களிலோ

(A) மகளிர் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும்

(B) ஆடவர் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும்

(C) தகுதி வாய்ந்த மகளிர் இல்லாத தேர்வுகளில் மட்டுமே ஆடவர் நியமிக்கப்பட வேண்டும்

(D) தகுதி வாய்ந்த ஆடவர் இல்லாத தேர்வுகளில் மட்டுமே மகளிர் நியமிக்கப்பட வேண்டும்

76. The percentage of reservation in appointments to be made by direct recruitment to group 'C' posts for Ex-servicemen shall be

(A) 2.5%
(B) 3%
(C) 4%
(D) 5%

'சி' தொகுதி பணியிடங்களில் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படுவதற்கு, முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீட்டு விழுக்காடு ———————— ஆகும்.

(A) 2.5%
(B) 3%
(C) 4%
(D) 5%

77. The unified vacancies reserved for the SCs and STs to be filled by recruitment by transfer or by promotion shall be carried over to ———————— consecutive recruitment years.

(A) 3
(B) 4
(C) 5
(D) 6

மாறுதல் மூலம் பணியமர்த்தம் அல்லது பதவி உயர்வு ஆகியவற்றில் பட்டியலினத்தவருக்காக (SCs and STs) ஒதுக்கப்பட்ட நிரப்பப்படாத பணியிடங்களை எத்தனை நியமன ஆண்டுகளுக்கு முன்னெடுத்துச் செல்லலாம்?

(A) 3
(B) 4
(C) 5
(D) 6

78. Generally in cases where no test or special qualifications are prescribed, a probationer shall be eligible for sanction of increments on

(A) Normal dates
(B) On completion of probation
(C) On completion of two years
(D) On completion of three years

பொதுவாக ஒரு தகுதிகாண் பருவத்தினருக்கு எந்தவொரு தேர்வுகளோ அல்லது சிறப்புத் தகுதிகளோ நிர்ணயிக்கப்படாத பட்சத்தில் அவர் ஆண்டு ஊதிய உயர்வு பெற தகுதி பெறும் காலம்

(A) அவரது இயல்பான நாளில்
(B) அவர் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்ற நாளுக்குப் பிறகு
(C) அவர் இரண்டு வருட காலம் பணி முடித்த பின்னர்
(D) அவர் மூன்று வருட காலம் பணி முடித்த பின்னர்

79. Charges framed under rule 17 (a) of the Tamil Nadu civil services (Discipline and Appeal) Rules is

(A) a bar for inclusion in the approved list

(B) a bar for inclusion in the approved list drawn for first time after 17 (a) charges

(C) not a bar for inclusion in the approved list

(D) bar for inclusion in the approved list for 5 years

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல் முறையீடு) விதிகளின் விதி 17(ஏ) இன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு நிலுவையில் இருப்பதென்பது

(A) ஏற்பளிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு தடையாய் அமையும்

(B) 17(ஏ) இன் கீழான குற்றச்சாட்டுகள் வனையப்பட்ட பிறகு முதல் முறை தயாரிக்கப்படும் ஏற்பளிக்கப்பட்ட பட்டியலில் மட்டும் சேர்க்கப்படுவதற்கு தடையாய் அமையும்

(C) ஏற்பளிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு தடையாய் அமையாது

(D) ஐந்து ஆண்டுகளுக்கான ஏற்பளிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு தடையாய் அமையும்

80. The maximum period upto which the probation of a Government Servant shall be extended to enable him to acquire the test qualification be fixed as

(A) 4 years (B) 5 years

(C) 6 years (D) 8 years

தேர்வுத் தகுதியை அடைவதற்காக தகுதி காண் பருவ காலம் அதிகபட்சம் எத்தனை காலம் நீட்டிக்கப்படலாம்?

(A) 4 ஆண்டுகள் (B) 5 ஆண்டுகள்

(C) 6 ஆண்டுகள் (D) 8 ஆண்டுகள்

81. If an order declaring the probationer to have satisfactorily completed his probation is not issued within ———— from the date on which the probation is eligible for such declaration, the probationer shall be deemed to have satisfactorily completed his probation on the date of expiry of the prescribed period of probation.

(A) 1 Year (B) 6 months

(C) 4 months (D) 8 months

தகுதி காண் பருவத்தை நிறைவு செய்ததற்கான ஆணையை தகுதி காண் பருவ காலம் முடித்த எத்தனை நாட்களுக்குள் வெளியிடப்படவில்லையெனில், அத் தகுதி காண் பருவத்தினர் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் தனது தகுதி காண் பருவத்தை நிறைவு செய்ததாக கருதப்படுவார்?

(A) 1 ஆண்டு (B) 6 மாதங்கள்

(C) 4 மாதங்கள் (D) 8 மாதங்கள்

82. In respect of cases of officers of state service, enquired into by the Tribunal for disciplinary proceedings final orders are to be issued by

(A) the tribunal (B) the head of department

(C) the government (D) the head of office

மாநிலப் பணி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடிவடிக்கை தீர்ப்பாயத்தால் விசாரணை நடத்தப்பட்ட நேர்வுகளில் இறுதி ஆணை யாரால் வெளியிடப்பட வேண்டும்?

(A) தீர்ப்பாயத்தால் (B) துறைத் தலைவரால்

(C) அரசால் (D) அலுவலகத் தலைவரால்

83. The power to annual, modify a list of approved candidates for appointment or promotion to any category prepared by the head of a department or any other lower authority lies with

(A) The Commission

(B) Head of Department who prepared the list

(C) Authority lower than the HoD which prepared the list

(D) Government

துறைத் தலைவராலோ வேறெந்த கீழ் நிலை அலுவலராலோ தயாரிக்கப்பட்ட எந்தவொரு வகையை சேர்ந்த பதவிக்கேனும் பதவி உயர்வு அல்லது நியமனத்திற்கான ஏற்கப்பட்ட வேட்பாளர் பட்டியலை நீக்குவதற்கு அல்லது மாற்றுவதற்கான அதிகாரம்

(A) தேர்வாணையத்திடம் உள்ளது

(B) துறைத் தலைவரிடம் உள்ளது

(C) அப் பட்டியலை தயாரித்த துறைத் தலைவருக்கு கீழ்நிலை அலுவலரிடம் உள்ளது

(D) அரசிடம் உள்ளது

84. Resignation of appointment,

(A) forfeit only the service rendered in the post held at the time of resignation

(B) does not forfeit the service rendered in the post held at the time of resignation

(C) forfeit the service rendered in the post held at the time of resignation and also all his previous service under the Government

(D) forfeits only the previous service under the Government

பணியமர்த்தலிலிருந்து பதவி விலகல் என்பது

(A) பதவி விலகும் போது வகிக்கும் பதவியில் புரிந்த முந்தைய பணியை மட்டுமே இழக்கச் செய்யும்

(B) பதவி விலகும் போது வகிக்கும் பதவியில் புரிந்த முந்தைய பணியை இழக்கச் செய்யாது

(C) பதவி விலகும் போது வகிக்கும் பதவி மற்றும் அதற்கு முன்னர் அரசின் கீழ் புரிந்த பணிகள் அனைத்தையும் இழக்கச் செய்யும்

(D) பதவி விலகும் போது வகித்த பதவிக்கு முன்னர் அரசின் கீழ் வகித்த பதவியின் பணியை மட்டும் இழக்கச் செய்யும்

85. The notice period for resignation is not less than

(A) 3 months
(B) 4 months
(C) 5 months
(D) 6 months

பதவி விலகலுக்கான அறிவிக்கை காலம் என்பது

(A) 3 மாதங்கள்
(B) 4 மாதங்கள்
(C) 5 மாதங்கள்
(D) 6 மாதங்கள்

86. The notice of resignation shall be given direct to the

(A) Government
(B) Head of Office
(C) Head of Department
(D) Whoever is the appointing authority

பதவி விலகலுக்கான அறிவிக்கையை யாரிடம் அளிக்க வேண்டும்?

(A) அரசிடம்
(B) அலுவலகத் தலைவரிடம்
(C) துறைத் தலைவரிடம்
(D) நியமன அலுவலர் எவரோ அவரிடம்

87. The notice period for resignation shall be reckoned from the date of

(A) such notice

(B) receipt of notice by the competent authority

(C) despatch of notice

(D) acceptance of notice by the competent authority

பதவி விலகலுக்கான அறிவிக்கை நாளை எந்நாளிலிருந்து கணக்கிட வேண்டும்?

(A) அந்த அறிவிக்கை நாளிலிருந்து

(B) தகுதி வாய்ந்த அலுவலரால் அவ்வறிவிக்கை பெறப்படும் நாளிலிருந்து

(C) அவ்வறிவிக்கை அனுப்பப்பட்ட நாளிலிருந்து

(D) தகுதி வாய்ந்த அலுவலரால் அவ்வறிவிக்கை ஏற்கப்படும் நாளிலிருந்து

88. A Government servant may withdraw the notice of his resignation

(A) Before its acceptance

(B) Within 1 month from the date of its acceptance

(C) Within 2 months from the date of its acceptance

(D) Within 6 months from the date of its acceptance

பதவி விலகலுக்கான அறிவிக்கையை ஒரு அரசு அலுவலர் எப்போது திரும்பப் பெறலாம்?

(A) அவ்வறிவிக்கை ஏற்கப்படுவதற்கு முன்னர்

(B) அவ்வறிவிக்கை ஏற்கப்பட்ட 1 மாதத்திற்குள்

(C) அவ்வறிவிக்கை ஏற்கப்பட்ட 2 மாதங்களுக்குள்

(D) அவ்வறிவிக்கை ஏற்கப்பட்ட 6 மாதங்களுக்குள்

89. The appointing authority shall issue orders on the notice of resignation before the date of expiry of notice either accepting the resignation or rejecting the same. If no such order is passed till the expiry of the notice period, the

(A) resignation is deemed to have been not accepted

(B) resignation is deemed to have been accepted

(C) action on the resignation notice is deemed to have been kept in abeyance

(D) orders of the appointing authority in this regard are to be awaited

நியமன அலுவலர் பதவி விலகலுக்கான அறிவிக்கை மீது அது ஏற்கப்பட்டதாகவோ அல்லது ஏற்கப்படாததாகவோ அவ்வறிவிக்கை காலாவதியாகும் காலத்திற்கு முன்னர் ஆணை வெளியிட வேண்டும். அவ்வாறு ஆணை வெளியிடாத பட்சத்தில்

(A) பதவி விலகல் ஏற்கப்படாததாக கருதப்பட வேண்டும்

(B) பதவி விலகல் ஏற்கப்பட்டதாக கருதப்பட வேண்டும்

(C) பதவி விலகல் அறிவிக்கை மீதான நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும்

(D) இது குறித்த நியமன அலுவலரின் ஆணைகள் எதிர் நோக்கப்பட வேண்டும்

90. One of the conditions for acceptance of notice of resignation is

(A) disciplinary proceedings not pending and not contemplated
(B) poor merit and ability
(C) not rendered qualifying service
(D) not completed probation period

பதவி விலகலுக்கான அறிவிக்கையை ஏற்கத் தேவையான நிபந்தனைகளுள் ஒன்று

(A) ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலோ அல்லது எடுக்க உத்தேசிக்கப்படவோ இல்லை
(B) குறைவான தகுதி மற்றும் திறமை
(C) தகுதிபேறு பணிக்காலம் பணி புரியாமை
(D) தகுதிகாண் பருவகாலம் முடிக்கப்பெறாமை

91. The vacancy caused due to the dismissal, removal, compulsory retirement of a person shall not be filled until the expiry of a period of ———— from the date of such dismissal etc., or until the appeal if any preferred by him is decided, whichever is ————

(A) 6 months, earlier
(B) 9 months, later
(C) 1 year, later
(D) 6 months, later

பணி நீக்கம், பணியறவு மற்றும் கட்டாய ஓய்வு ஆகிய தண்டனை விதிக்கப்பட்டதனால் ஏற்படும் காலிப் பணியிடத்தை அவ்வாறு பணிநீக்கம், பணியறவு மற்றும் கட்டாய ஓய்வு தண்டனை விதிக்கப்பட்ட நாளிலிருந்து ———— காலமோ அல்லது அவர் மேல் முறையீடு மீது முடிவு எடுக்கப்படும் நாள் இதில் எது ———— அது வரை அப்பணியிடத்தை நிரப்பக் கூடாது.

(A) 6 மாத, முன்னரோ
(B) 9 மாத, பின்னரோ
(C) 1 ஆண்டு, பின்னரோ
(D) 6 மாத, பின்னரோ

92. The claim for alteration of date of birth at the time of appointment in cases where appointment shall be made in consultation with the Commission shall be made to the

(A) Appointing Authority
(B) Government
(C) Commission
(D) Commissioner of Revenue Administration

தேர்வாணையத்துடன் கலந்தாலோசித்து பணி நியமனம் செய்யப்படும் நேர்வுகளில் பிறந்த தேதி மாற்றத்திற்கான விண்ணப்பங்கள் பணி நியமனம் செய்யப்படும் போது எவரிடம் செய்யப்பட வேண்டும்?

(A) நியமன அலுவலர்
(B) அரசு
(C) தேர்வாணையம்
(D) வருவாய் நிர்வாக ஆணையர்

93. Application for alteration of date of birth in official records shall be entertained only if such an application is made

(A) before promotion

(B) before retirement

(C) before completion of probation period

(D) within 5 years

அலுவலக பதிவேடுகளில் பிறந்த தேதி மாற்றம் செய்வதற்கான விண்ணப்பங்களை பரிசீலனைக்கு ஏற்க வேண்டுமாயின் அவ் விண்ணப்பங்கள் ———————— செய்யப்பட்டிருக்க வேண்டும்

(A) பதவி உயர்விற்கு முன்னர்

(B) பணி ஓய்விற்கு முன்னர்

(C) தகுதி காண் பருவம் முடிக்கும் முன்னர்

(D) பணியில் சேர்ந்து 5 ஆண்டுகளுக்குள்

94. In cases relating to correction of date of birth where the SSLC and the Military Discharge Certificate contain different dates of birth, the date of birth entered in the ———————— shall be accepted.

(A) Military Discharge Certificate

(B) Medical Certificate obtained from a competent authority

(C) Secondary School Leaving Certificate

(D) Transfer Certificate issued by the institution in which last studied

பிறந்த தேதி திருத்தம் செய்யக் கோரும் நேர்வுகளில் பள்ளி இறுதித் தேர்வு சான்றிதழிலும் இராணுவ விடுப்பு சான்றிதழிலும் இரு வேறு பிறந்த தேதிகள் குறிப்பிடப்பட்டிருந்தால் எந்த சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த தேதியினை ஏற்றுக் கொள்ள வேண்டும்?

(A) இராணுவ விடுவிப்பு சான்றிதழ்

(B) தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ்

(C) பள்ளி இறுதித் தேர்வு சான்றிதழ்

(D) இறுதியாக படித்த கல்வி நிலையத்திலிருந்து பெறப்பட்ட மாறுதல் சான்றிதழ்

95. In the absence of any other authoritative records, on the basis of medical opinion

(A) the Head of Department shall propose suo-motu alteration of date of birth

(B) the Government shall propose suo-motu alteration of date of birth

(C) the appointing authority shall propose suo-motu alteration of date of birth

(D) the Head of Office shall propose suo-motu alteration of date of birth

வேறெந்த ஆதாரபூர்வ ஆவணங்களும் இல்லாத போது மருத்துவரின் கருத்தின்பேரில்

(A) துறைத் தலைவர் தானாகவே முன்வந்து பிறந்த தேதியை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்

(B) அரசு தானாகவே முன்வந்து பிறந்த தேதியை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்

(C) நியமன அலுவலர் தானாகவே முன் வந்து பிறந்த தேதியை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்

(D) அலுவலகத் தலைவர் தானாகவே முன்வந்து பிறந்த தேதியை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம்

96. Generally, a differently abled person shall be eligible for age concession upto

(A) 5 years
(B) 8 years
(C) 10 years
(D) 3 years

பொதுவாக மாற்றுத் திறனாளிகளுக்கு வயது வரம்பு எத்தனை ஆண்டு அளவிற்கு தளர்வு செய்யப்படுகிறது?

(A) 5 ஆண்டுகள்
(B) 8 ஆண்டுகள்
(C) 10 ஆண்டுகள்
(D) 3 ஆண்டுகள்

97. An appeal or review shall be preferred within

(A) 1 year
(B) 6 months
(C) 2 months
(D) 4 months

மேல் முறையீடு அல்லது மறு ஆய்வு கோரும் மனு எத்தனை நாட்களுக்குள் அளிக்கப்பட வேண்டும்?

(A) 1 ஆண்டு
(B) 6 மாதம்
(C) 2 மாதம்
(D) 4 மாதம்

98. As per the Tamil Nadu Government servants' (Condidtions of service Act) every appeal or review shall be disposed of within

(A) 6 months
(B) 4 months
(C) 2 months
(D) 1 year .

தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் படி ஒவ்வொரு மேல் முறையீடு அல்லது மறு ஆய்வு மனுக்கள் மீது இறுதி முடிவு எத்தனை நாட்களுக்குள் எடுக்கப்பட வேண்டும்

(A) 6 மாதங்கள்
(B) 4 மாதங்கள்
(C) 2 மாதங்கள்
(D) 1 ஆண்டு

99. The seniority of a person in a service shall be determined in the order of this placement in the list prepared by the

(A) recruitment agency or the appointing authority
(B) recruitment agency or the government
(C) recruitment agency or the head of department
(D) appointing authority or the government

ஒரு பணியில் ஒருவரது முதுநிலை என்பது கீழ்கண்டவற்றுள் ஒன்றால் தயாரிக்கப்படும் பட்டியலில் அவரது இத்தைப் பொறுத்து அமையும்

(A) பணியமர்த்தும் முகமை அல்லது நியமன அலுவலர்
(B) பணியமர்த்தும் முகமை அல்லது அரசு
(C) பணியமர்த்தும் முகமை அல்லது துறைத் தலைவர்
(D) நியமன அலுவலர் அல்லது அரசு

100. A member of a service who is on extension of service after superannuation, during the period of such extension of service

(A) shall be considered for appointment on promotion in the same service only
(B) shall be considered for recruitment by transfer to a higher category in antother service only
(C) shall not be considered either for appointment on promotion or for recruitment by transfer
(D) shall be considered both for appointment on promotion or for recruitment by transfer as the case may be

ஒரு பணியின் அங்கத்தினர் அவர் வயது மூப்பு காரணமாக ஓய்வு பெறும் காலத்திற்குப் பின்னர் பணி நீட்டிப்பில் இருக்கும் போது அப் பணிநீட்டிப்புக் காலத்தில்

(A) அதே பணியில் பதவி உயர்விற்கு அவரது பெயர் பரிசீலனை செய்யப்பட வேண்டும்
(B) வேறொரு பணியில் உயர் வகுப்பு பதவியில் மாறுதல் அடிப்படையில் மட்டுமே பணியமர்த்தம் செய்யப்பட வேண்டும்
(C) பதவி உயர்வு மூலம் பணி நியமனத்திற்கோ அல்லது மாறுதல் அடிப்படையில் பணியமர்த்தத்திற்கோ அவரது பெயர் பரிசீலனை செய்யப்படக் கூடாது
(D) பதவி உயர்வு மூலம் பணி நியமனம் அல்லது மாறுதல் அடிப்படையில் பணியமர்த்தம் ஆகியவற்றிற்கு அவரது பெயர் பரிசீலனை செய்யப்பட வேண்டும்

---